**எம்.சி.ஓ.பி. எண்: 471/2024**

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 29th day of July 2025

**ம.சா.1. வேளாங்கண்ணி, க/பெ. முருகன்,**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் இறந்து போன 1ம் மனுதாரர் எனது மாமியார் பெரியகுழந்தையம்மாள் என்றால் சரிதான். நான் அசல் மனுவின் 2ம் மனுதாரர் என்றால் சரிதான். அசல் மனுவில் 3 முதல் 5 மனுதாரர்கள் எனது குழந்தைகள் ஆவார்கள். 3ம் மனுதாரர் ஆஷாவிற்கு திருமணம் ஆகவில்லை. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்பதால் யாருடைய அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்பட்டது என சொல்ல இயலாது என்றால் சரிதான். எனது கணவர் முருகனை வேளாங்கண்ணி என்ற நபர் சைக்கிள் ரிக்ஷா வாங்க கூட்டி சென்றார். விபத்தின் போது சைக்கிள் ரிக்ஷாவை வேளாங்கண்ணி ஓட்டி சென்றார். விபத்து அய்யம்பாளையம் கூட்ரோட்டில் நடந்தது. எந்த ஊர் என்று தெரியாது. சைக்கிள் ரிக்ஷா வேலூரில் இருந்து திருவண்ணாமலை நோக்கி வந்தது. விபத்து பற்றி நான் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். இந்த விபத்தின் போது எனது கணவருக்கு சுமார் 55 வயது இருக்கும். விபத்தின் போது எனது கணவருக்கு நிரந்தர வேலை கிடையாது என்றால் சரிதான். கூலிக்கு மூட்டை தூக்கி சம்பாதிப்பார். எனது கணவர் மாதம் ரூ.15,000/- சம்பாதிப்பார் என்பதற்கு ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விபத்து வேளாங்கண்ணி என்பவர் அஜாக்கிரதையாக சைக்கிள் ரிக்ஷாவை ஓட்டி சென்று இந்த எதிர்மனுதாரர் பேருந்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் பேருந்தை மெதுவாக தான் ஓட்டி வந்தார் என்றும் வேளாங்கண்ணி தான் சைக்கிள் ரிக்ஷாவை ஓட்ட தெரியாமல் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. பேருந்து ஓட்டுனரின் அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்படவில்லை என்பதால் இந்த எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொருத்து இந்த மனு தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றால் சரியல்ல.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/- S. Senthilbabu,<br>சார்பு நீதிபதி.<br>போளூர். |